<u>சுருக்கம்</u>

கைத்தறி தொழில் – அறிவிப்பு – 2021–2022–ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானியக் கோரிக்கை – விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி துணி இரகங்களுக்கு நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலியினை உயர்த்தி வழங்க – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை

அரசாணை (நிலை) எண்.131

நாள் 09.11.2021
பிலவ, ஐப்பசி 23,
திருவள்ளுவராண்டு 2052.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.2, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை, நாள் 02.01.2013.
2. கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரின் கடிதம் ந.க.எண்.23845/ப்பி2/2021, நாள் 14.09.2021.

--------

<u>ஆணை:</u>

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் கைத்தறி வேட்டி சேலைகளை உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலியை வழங்க கொள்கையளவில் அனுமதி அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. 06.09.2021 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில், 2021–2022–ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானியக் கோரிக்கை எண்.17–ஐ தாக்கல் செய்து மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில், அறிவிப்பு எண்.8–இல் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:–

(த.பி.பா)

8. இலவச சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி கேஸ்மெண்ட் துணி இரகங்களுக்கு நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி உயர்த்தி வழங்கப்படும்.

இலவச சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி கேஸ்மெண்ட் துணி இரகங்களுக்கு நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி, ஒரு மீட்டருக்கு ரூபாய் 4.89 ஆக உயர்த்தியும், கைத்தறி டிரில் துணி இரகங்களுக்கு ஒரு மீட்டருக்கு ரூபாய் 3.81 லிருந்து ரூபாய் 4.69 ஆக உயர்த்தியும் வழங்கப்படும். இதன் மூலம் அரசுக்கு ரூபாய் 75 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

3. பத்தி 2–இல் காணும் மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர், இன்னபிறவற்றுள், இலவச சீருடை வழங்கும் திட்டமானது, 1985–1986–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி இரகங்களின் நெசவுக்கு முந்தைய பணிகளுக்கு வழங்கப்படும் கூலியானது 2013–இல் தனியாக பிரித்து வழங்கப்பட்டது, அதன் பின்னர் அரசுத் திட்டங்களின் கீழ் கைத்தறி மற்றும் பெடல்தறி இரகங்களின் உற்பத்திக்கு அடிப்படைக் கூலி அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ள நிலையில் நெசவுக்கு முந்தைய பணிக்கான கூலி உயர்வு வழங்கப்படவில்லை என்றும் கைத்தறி மற்றும் பெடல்தறி நெசவாளர்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள கூலியினை விட குறைவான கூலியே கிடைத்து வருகிறது என்றும், தற்போதைய விலைவாசி உயர்வு மற்றும் மூலப்பொருட்களின் விலை உயர்வு, இயந்திரங்கள் பழுதுபார்ப்பு போன்ற காரணிகளின் அடிப்படையில் நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி அதிகப்படியாக கொடுக்க வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

4. மேலும், நெசவுக்கு முந்தைய பணிகளில் தொழில்நுட்பம் அறிந்த பணியாளர்கள் மட்டுமே மேற்படி பணிகளை மேற்கொள்ள முடியும் என்பதாலும், கைத்தறி டிரில் இரகத்தில் 2/40s PC இரக நூல் பாவு மற்றும் ஊடை நூல் ஆகியவை பயன்பாட்டில் உள்ளதால் பாவு பிணைத்தல் மற்றும் ஊடை தார் சுற்றும் பணிகளுக்கு கூடுதலாக கூலி வழங்க வேண்டியுள்ளதாலும், இலவச சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி துணி இரகங்களுக்கு நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலியினை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கவும் அவ்வாறு உயர்த்தி வழங்கும் நேர்வில் ஏற்படும் உத்தேச கூடுதல் செலவினமான ரூ.74.81 இலட்சத்தை, அந்தந்த நிதியாண்டில் வரவு

(தொடர்ச்சி...)

செலவு, மதிப்பீட்டில் பள்ளி கல்வித் துறையால் இலவச சீருடை வழங்கும் திட்டம் செயல்படுத்த ஒதுக்கீடு செய்யப்படும் தொகையான ரூ.327.44 கோடியுடன் மொத்தம் ரூ.328.19 கோடி ஒதுக்கீடு செய்து வழங்க பள்ளிக் கல்வித் துறைக்கு பரிந்துரை செய்யுமாறும் கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| இரகம் | தற்போது வழங்கப்படும் நெசவுக்கு முந்தைய கூலி (ரூ) | உயர்த்தி வழங்க பரிந்துரை செய்யும் நெசவுக்கு முந்தைய கூலி தொகை (ரூ) | பயனடையும் நெசவாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கைத்தறி / பெடல்தறி கேஸ்மெண்ட் | 4.32 | 4.89 | 7,226 |
| கைத்தறி டிரில் | 3.81 | 4.69 | |

5. கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, இலவச சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி துணி இரகங்களுக்கு நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலியினை பின்வருமாறு உயர்த்தி வழங்கியும், அவ்வாறு கூலியினை உயர்த்தி வழங்கப்படும் நேர்வில் ஏற்படும் உத்தேச கூடுதல் செலவினமான ரூ.74.81 இலட்சத்தை, நடப்பு நிதியாண்டில் வரவு செலவு, மதிப்பீட்டில் இலவச சீருடை வழங்கும் திட்டம் செயல்படுத்த பள்ளி கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையான ரூ.409.30 கோடியில் மேற்காணும் கூடுதல் செலவினத்தை மேற்கொள்ளலாம் என்று அனுமதி அளிப்பதுடன், கூடுதல் தொகை மேற்சொன்ன இலவச சீருடைத் திட்டம் செயல்படுத்த ஒதுக்கீடு செய்த தொகைக்கு மேல் தேவைப்படின், உரிய விவரங்களுடன் நிதித்துறைக்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம் என்ற நிபந்தனையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது:-

| இரகம் | தற்போது வழங்கப்படும் நெசவுக்கு முந்தைய கூலி (ரூ) | உயர்த்தி வழங்க பரிந்துரை செய்யும் நெசவுக்கு முந்தைய கூலி தொகை (ரூ) | பயனடையும் நெசவாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கைத்தறி / பெடல்தறி கேஸ்மெண்ட் | 4.32 | 4.89 | 7,226 |
| கைத்தறி டிரில் | 3.81 | 4.69 | |

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.19/DS(NS)/2021, நிதி(தொழில்கள்)/ 2021, நாள் 03.11.2021–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:
கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர், சென்னை – 600 104.
தொடக்க கல்வி இயக்குநர், சென்னை – 600 006.
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை – 600 006.
மாநில தலைமை கணக்காயர் (A&E)/(CAS)/(CA), சென்னை – 600 018/09.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை – 600 001.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்–IV, சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) / (பள்ளிக் கல்வி) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
நிதி(தொழில்கள்/ பள்ளிக் கல்வி / வ.செ.பொது–I/II/வ.வ–I)த் துறை,
சென்னை – 600 009.
பள்ளிக் கல்வித்துறை, சென்னை – 600 009.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, சென்னை – 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(ஏ1/பி1)த் துறை, சென்னை – 600 009.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

✓ இருப்பு கோப்பு

9/XI/2024
தேர்வுநிலை பிரிவு அலுவலர்.

9/11/2024